**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
E.A.75/2017, E.P.91/1997, O.S.193/1996

**2018 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் நாள்**
சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் சாந்தி வயது

த.பெ/க.பெ மதம்

முகவரி தொழில்

**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 16ம் சாட்சி (PW16) (21.08.2018) இடம் பிரச்சனை சம்மந்தமாக நான் மனு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. முனியனை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து 30 ஆண்டுகளுக்கு முன்பு சுவாதீனம் சென்றேன். ஒரே நாளில் அனைவரும் தாவா சொத்தில் குடிசை போட்டோம். நாங்கள் தாவா சொத்தில் குடிசை போட்ட காலகட்டத்தில் அங்கு முருகேசன் இருந்தார் என்றால் சரிதான். எனக்கு தற்போது 42 வயது ஆகிறது. எனது 25வது வயதில் திருமணம் நடைபெற்றது. என் கணவர் ரங்கன் என்கின்ற ரங்கசாமி ஆவார். தாவா சொத்தில் குடிசை போட்ட காலகட்டத்தில் எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது சொந்த ஊர் செட்டிபாளையம் ஆகும். எனக்கு திருமணம் ஆகி 1 வருட காலம் கழித்து தாவா சொத்தில் குடிசை போட்டோம். நான் குடிசை போட்டு 6 மாதம் கழித்து பட்டா வழங்கப்பட்டது. இடம் கேட்டு மனு செய்திருந்தேன், அப்போது கிராம நிர்வாக அலுவலர் தாவா சொத்திற்கு சென்று குடிசை போடுமாறு அறிவுறுத்தினார். அப்போதைய கிராம நிர்வாக அலுவலர் யார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. குடிசை போடுமாறு அப்போதைய கிராம நிர்வாக அலுவலர் எழுத்துபூர்வமாக எழுதிக்கொடுத்தார். அச்சமயத்தில் முருகேசன்

எங்களுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளித்தாரா என்றால் புகார் அளித்ததாக தெரிவித்தார்கள். முருகேச கவுண்டர் இந்நீதிமன்றத்தில் எனக்கு எதிராகவும், மற்றவர்களுக்கு எதிராகவும் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் மனு சொத்தை பொறுத்து 30.4.1990 ல் அசல் வழக்கு எண் 172/1990 தாக்கல் செய்து பின்னிட்டு மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண் 193/96 ஆக கோப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் நான் 107 பிரதிவாதி என்றும் எனக்கு வழக்கு அழைப்பாணை அனுபப்பட்டது என்றால் சரிதான். நான் எனது தரப்பில் வழக்கறிஞரை நியமித்து வழக்காடினேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் மனு சொத்து முருகேச கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தினை பிரதிவாதிகள் காலி செய்து முருகேச கவுண்டருக்கு சுவாதீனம் கொடுக்கப்பட வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 ல் 63 மேல் முறையீட்டாளர் என்றால் சரிதான். மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல, வழக்கு நிலுவையில் உள்ளது. நான் குறிப்பிடுவது போல் மேல் முறையீட்டு வழக்கு நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. மேல் முறையீட்டு வழக்கின் வாய்தா என்னவென்றால் எனக்கு தெரியாது. மனு சொத்தை சுவாதீனம் எடுப்பதற்கு நீதிமன்ற அமீனா 2 வருட காலத்திற்கு முன்பு மனு சொத்திற்கு வந்தார் என்றால் சரிதான். நானும் மற்றவர்களும் இம்மனுவில் எங்களுக்கு எதிராக பிறபிக்கப்பட்ட ஒரு தலை பட்ச உத்தரவினை ரத்து செய்யுமாறு E.A.14/2017 தாக்கல் செய்து மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சீராய்பு மனுவிற்கு பின்னிட்டுதான் இம்மனுவினை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். பாப்பம்மாள், கிருஷ்ணசாமி, குப்பாத்தாள், ராஜம்மாள் ஆகியோர்களை எனக்கு தெரியாது. அவர்கள் தாவா சொத்தில் குடியிருந்து

வருகிறார்கள். மேற்படியாளர்கள் தாக்கல் செய்த மனுவைப்பற்றி எனக்கு தெரியாது. முருகேச கவுண்டர் 2 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். முருகேச கவுண்டர் மனு சொத்தைப் பொறுத்து யார் மீது ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தனலட்சுமி மற்றும் தங்கசாமி பெயரில் முருகேச கவுண்டர் மனு சொத்தைப் பொறுத்து உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தனலட்சுமி, தங்கசாமி எங்களை தாவா சொத்தை காலி செய்து சுவாதீனம் ஒப்படைப்பதற்காக மனு தாக்கல் செய்துள்ளார்கள். எங்களுக்கு 1991 ம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டதாக சொல்லும் கால கட்டத்தில் முருகேச கவுண்டர் ஒரு வருட காலத்திற்கு முன்பே இவ் அசல் வழக்கினை தாக்கல் செய்துவிட்டார் என்றும், வழக்கு நிலுவையில் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு முருகேச கவுண்டர் தான் மனு சொத்தின் உரிமையாளர் என்றும், அவர் வசம் சுவாதீனம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று அசல் வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் ஏற்கனவே அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்றும், மீண்டும் அதே காரணங்களுக்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எனது தரப்பு வரி ரசீதுகள் இம்மனுவிற்கு பின்னிட்டு ஏற்பட்டவை என்றும் மேற்படி ரசீதுகள் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. இவ் அசல் வழக்கு தீர்ப்பின் படி மனு சொத்தை சுவாதீனம் ஒப்படைப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றும், வீண் கால தாமதம் செய்ய வேண்டி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் பெயரில் வழங்கப்பட்டதாக நான் தாக்கல் செய்துள்ள மனுதாரர் சான்றாவணம் P-76 எனக்கு ஆதரவாக வழங்கப்பட்ட பட்டா ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**E.A**.75/2017, **E.P**.91/1997, **O.S**.193/1996

2018 **ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் நாள்**
சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் அருக்காணி வயது

த.பெ/க.பெ மதம்

முகவரி தொழில்

**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 17ம் சாட்சி (**PW**17) (21.08.2018) இடம் பிரச்சனை சம்மந்தமாக நான் மனு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, ஆகையால் மனு தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவா சொத்து 30 ஆண்டுகளுக்கு முன்பு நானும் பலரும் குடிசை போட்டோம். முனியனை நான் பார்த்ததில்லை. முருகேச கவுண்டரை தெரியும். நான் குடிசை போட்ட கால கட்டத்தில் முருகேச கவுண்டர் தாவா சொத்தின் கிழபுற பகுதியில் சுவாதீனத்தில் இருந்தார். முருகேச கவுண்டர் எங்களுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக என் பெயரில் வழங்கப்பட்டதாக சொல்லும் பட்டாவினை தவிர நான் வேறு ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது சொந்த ஊர் திருப்பூர் சந்தைக்கு அருகே உள்ள கே.வி.நகர் ஆகும். எனது உறவினர்கள் தாவா சொத்தில் குடிசை போடுமாறு தெரிவித்தார்கள். நான் குடிசை போட்டு 1 வருட காலம் கழித்து பட்டா வழங்கப்பட்டது. ஒரே நாளில் அனைவருக்கும் வட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்து பட்டா வழங்கப்பட்டது. முருகேச கவுண்டர் இந்நீதிமன்றத்தில் எனக்கு எதிராகவும், மற்றவர்களுக்கு எதிராகவும் திருப்பூர்

சார்பு நீதிமன்றத்தில் மனு சொத்தை பொறுத்து 30.4.1990 ல் அசல் வழக்கு எண் 172/1990 தாக்கல் செய்து பின்னிட்டு மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண் 193/96 ஆக கோப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் நான் 108 பிரதிவாதி என்றும் எனக்கு வழக்கு அழைப்பாணை அனுபப்பட்டது என்றால் சரிதான். நான் எனது தரப்பில் வழக்கறிஞரை நியமித்து வழக்காடினேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் மனு சொத்து முருகேச கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தினை பிரதிவாதிகள் காலி செய்து முருகேச கவுண்டருக்கு சுவாதீனம் கொடுக்கப்பட வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002-ல் 64 மேல் முறையீட்டாளர் என்றால் சரிதான். மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல, வழக்கு நிலுவையில் உள்ளது. மேல் முறையீட்டு வழக்கின் வாய்தா என்னவென்றால் எனக்கு தெரியாது. நான் குறிப்பிடுவது போல் மேல் முறையீட்டு வழக்கு நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. மனு சொத்தை சுவாதீனம் எடுப்பதற்கு நீதிமன்ற அமீனா 2 வருட காலத்திற்கு முன்பு மனு சொத்திற்கு வந்தார் என்றால் எனக்கு தெரியாது. நிறைவேற்று மனு எண்.91/97 பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யுமாறு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு அந்த உத்தரவின் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முருகேச கவுண்டர் இறந்துவிட்டார். முருகேச கவுண்டர் மனு சொத்தைப் பொறுத்து யார் மீது ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தனலட்சுமி மற்றும் தங்கசாமி பெயரில் முருகேச கவுண்டர் மனு சொத்தைப் பொறுத்து உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. உயிலின் அடிப்படையில் தனலட்சுமி, தங்கசாமிக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது

என்றால் எனக்கு தெரியாது. எங்களுக்கு 1991 ம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டதாக சொல்லும் கால கட்டத்தில் முருகேச கவுண்டர் ஒரு வருட காலத்திற்கு முன்பே இவ் அசல் வழக்கினை தாக்கல் செய்துவிட்டார் என்றும், வழக்கு நிலுவையில் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு முருகேச கவுண்டர் தான் மனு சொத்தின் உரிமையாளர் என்றும், அவர் வசம் சுவாதீனம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று அசல் வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் ஏற்கனவே அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்றும், மீண்டும் அதே காரணங்களுக்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எனது தரப்பு வரி ரசீதுகள் இம்மனுவிற்கு பின்னிட்டு ஏற்பட்டவை என்றும் மேற்படி ரசீதுகள் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. இவ் அசல் வழக்கு தீர்ப்பின் படி மனு சொத்தை சுவாதீனம் ஒப்படைப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றும், வீண் கால தாமதம் செய்ய வேண்டி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.